தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஹு மாசி மீ 7 உ (18-2-'23.) | ப. 41.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 425
(உதவி பத்திராதிபர்)
2 வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள் ... 426
[K. R. R. சாஸ்திரி, M. A. F. R. Econ. S.]
3. இருப்புப்பாதையும் கம்பெனி நிர்வாகமும் ... 426
[C. S. பம்பாபதி சாஸ்திரி, B. A, B. L.,]
4. புத்தகக் கடன் ... 427
5. ஸ்ரீரவீந்திரநாத கவீந்திரர் ... 428
[ஸ்ரீ பார்த்தஸாரதி மிச்ரன்]
6. புயற் காற்று ... 429
[நாராயணையர், M.A., M.L.,]

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' காரியாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்.]

ஸ்ரீமான் தாஸ் அவர்களை தலைமையாய்க் கொண்ட ஸ்வராஜ்யக் கட்சியார் தங்களுடைய நிர்மாண வேலைகளைப் பற்றிய விவரம் ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள். அந் நிர்மாண வேலைகள் ஊக்கத்துடன் செவ்வனே நடத்தப்படுமாயின் ஸ்வராஜ்யம் சீக்கிரத்தில் கிட்டக்கூடும். அரசாங்க ஸ்தாபனத்தால் ஜனங்கள் அடையும் நன்மைகளை செய்விப்பதே அந்நிர்மாண வேலைகளின் நோக்கமாகும். ராஜ்ய பரிபாலனத்திற்குவேண்டியமுறைகள் காங்கிரஸ் ஸ்தாபனத்தால் கைக்கொள்ளப்படுமாயின் பொது ஜனங்கள் தற்கால அரசாங்கத்தினிடம் கொண்டிருக்கும் பற்றை விடுத்து காங்கிரஸின் பிரஜைகளாக மாறிவிடுவார்கள். ஸ்ரீமான் தாஸ் கட்சியார் சட்டஸபை பிரவேசத்தில் ஈடுபட்டிருப்பதால் நிர்மாண வேலைகளை ஊக்கத்துடன் நடத்துவார்களோ என்ற விஷயமே ஸந்தேகமாயிருக்கிறது.

* * *

அந்நிய தேசச் சரக்குகளின் மேல் சுங்க வரி விதிப்பதன் விஷயமாய் சட்டஸபையில் தீவிரமான விவாதம் ஏற்படப்போகின்றது. நம்முடைய தேசத்தின் கைத்தொழில்கள் முன்னேற்றமடைவதற்கு இச் சுங்கவரி முறையையே ஓர் ஊன்றுகோலாக வைத்துக் கொண்டிருக்கிறோம். சட்டஸபையில் நம் கருத்து நிறைவேறும் வண்ணம் இம்முறை அமைக்கப்படுமோ வென்பது தீர்மானப்படவில்லை. தொழிற்காப்பை ஆதரித்து சிபார்சுகள் செய்த கமிஷனுடைய வேலைகள் உபயோகப்படாமல் போய்விடுமென்று ஒருவாறு புலப்படுகிறது. வீண் செலவுக்கு மட்டும் கமிஷன்களின் வேலை நடக்கிறதே யொழிய யாதொரு பயனும் விளைவதில்லை என்ற அனுபவம் பொய்யாகுமா.

* * *

அய்யங்காரவர்களே! அரசாங்க நிர்வாகத்தில் அரசாங்க முறைகளெல்லாம் சரியென இதுகாறும் தலையசைத்தீர். 'ஸர்' பட்டமும் பெற்றீர்! எடுத்துக்கொண்ட கக்ஷியை நிலைநிறுத்துவதே தருமமெனக் கொள்ளும் உம்முடைய 'நியாயவாத' மனஸுக்கும் பொருமல், ஏழைக் குடிமக்கள் பிழைப்பதற்கென்று கொண்டுவந்த 'நீர்ப்பாய்ச்சல் சட்டம்' (Irrigation bill) அடைந்த கதியை என்னென்று சொல்வது. உம்முடைய 'கவர்னர்' உம்மையும் மறந்தார். அபர வயதில் விளையாடத் தலைப்பட்டார். இனியேனும் பொதுஜன உழைப்பில் திரும்புவீரா? ஆனால் ஒரு சந்தேகம். 'ஸர்' பட்டத்தை என்ன செய்வீர்?—

* * *

'உத்தியோக இரகசிய சட்டம்' (Official Secrets Bill) என்பது அமுலுக்கு வந்தாலும் வரலாம். இச் சட்டத்திலடங்கிய விஷயங்களை உற்று நோக்கின் மனது கலங்குகின்றது. 1911-வது வருஷத்திய சட்டமே மேலாகத் தோன்றுகிறது. நம் தலைவர்கள் இதன் குற்றங்களைக் கடிந்து தேசபக்தர்களைக் காப்பாற்றுவார்களோ!

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெரு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

II காளி கட்டமும் தக்ஷிணேச்வரமும்.

K. R. R. சாஸ்திரி M. A. F. R. Econ. S.

வடப்ரதேசங்களில் காளி கோயில்களில் நரபலியிடுவது வழக்கமென்று வெகு காலமாய் கூக்குரலிருந்து வந்தது. சிறு குழந்தைகளை சுக்குபொடிக்காரன் ஏமாற்றி தூக்கிக்கொண்டு போவதும் இதற்காகவே யென்று பாமர ஜனங்கள் நம்பினதுண்டு. இந்த பலிகள் தற்காலம் அநுஷ்டானத்திலில்லை. கல்கத்தா என்ற பெயரே "காளி கட்டம்" என்ற மொழியிலிருந்து வந்தது. அரண்மனைகளடங்கிய இப்பட்டணத்தில் கோயில்களைப் பார்ப்பது மிகவும் அரிதாக யிருக்கிறது. மதுரைக்கு எப்படி மீனாக்ஷி இஷ்ட தேவதையோ, காஞ்சிக்கு காமாக்ஷியோ, காசிக்கு விசாலாக்ஷியோ, அம்மாதிரியே கல்கத்தாவுக்கு காளியே இஷ்ட தேவதை.

காளிதேவியின் கோயில்.

பூரிப்பாதைகளின் சீர்கேடைப்பற்றி சென்ற வாரம் எழுதினோம். 1911௵ வரையில் ராஜப்ரதிநிதியின் வாசஸ்தலமாயிருந்த கல்கத்தாவில் சாலைகளின் விஸ்தாரத்தையும், ஒழுங்கையும் பற்றி விவரிக்கவும் வேண்டுமோ? காளி கோயில் ஸமீபம் வந்தவுடன், ஒரு கோயிலிருப்பதாகவே தெரியவில்லை. வட இந்தியாவிலுள்ள கோயில்களின் வாசல்கள் நம் வீடுகளிருப்பது போலவே யிருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். காளி கோயிலுக்கு முன் ஒரு சிறிய தெப்பக்குளமுளது. அதின் தீர்த்தம் நம் புஷ்கரணிகளிற் போலவே அவ்வளவு சுத்தமாயில்லை. காளிக்கு நைவேத்யம் சுமார் 15 ஸாதனங்கள் வரையிலும் ஒரு மண் தட்டில், அருகிலிருக்கும் கடைகளில் விற்கிறார்கள். பூரியைப்போலவே இங்கேயும் வெளிப்ரகாரம் மாத்திரமே யிருக்கிறது.

கோயிலுக்குள் நுழையும் கதவு வெகு சிறிது. ஏககாலத்தில் இரண்டு மனுஷ்யர்கள் தான் உள்ளே போகமுடியும். கூட்டத்தின் நெருக்கடியும் ஸஹிக்க முடியவில்லை. இந்த தேவ மந்திர் (கோயில்) பளிங்கக் கல்லால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. காளியது விக்கிரஹமோ பயங்கரமானது தான். சக்தியது அம்சமும் துஷ்டர்களை நாசம் செய்வதே கங்கணமாய்க் கொண்டதாலும், மனுஷ்யர்களுக்கு இந்த அவஸ்தையை நிரூபிக்க வேண்டியதும் ஸரியே. தேவியது நாலு கைகளில் வலக்கைகளை அடிப்பதற்கு ஆயத்தமாயும், இடக்கைகளில் ஒன்றில் வெட்டரிவாளும், மற்றொன்றில் ராக்ஷஸனது சிரஸை சிண்டால் தூக்கிக்கொண்டு நாவை நீட்டி தேவி கோபாவேசத்தில் வீற்றிருப்பதை நோக்குமிடத்து, ஸம்ஹார அவதாரத்தின் பெருமை ஜ்வலிக்கிறதென்றே சொல்லவேண்டும். குங்கும ப்ரஸாதம் பக்தர்களின் நெற்றியிலேயே குருக்களாலிடப்படுகிறது.

வெளிப்ராகாரத்தில் ஒரு மரமிருக்கின்றது. அதில் ஒவ்வொரு இலையிலும் சிறிய கற்கள் தொங்க விடப்பட்டிருக்கின்றன. ஐதீகம் யாதெனின், மக்கட்பேறு இல்லாதோர், மஹா வரப்ரஸாதியான காளியை வேண்டிக்கொண்டு இம்மாறு, கற்களைத் தொங்கவிடுவது வழக்கமாம். இக்கோயிலில் ஏழைகளுக்கு தினந்தோறும் அன்னமளிக்கிறார்கள். டல்ஹௌஸீ சவுக்கமென்ன, சௌரிங்கீயென்ன இவைகளெல்லாமுள்ள கல்கத்தா நகரில் காளிகோயில் இவ்வளவு சிறியதாகவே தானிருக்க வேண்டுமோ என்ற கேள்வி மாத்திரம் ஒவ்வொரு நிமிஷமும் பிறந்துகொண்டே யிருக்கிறது.

தக்ஷிணேச்வரம் போகுதல்

கல்கத்தாவுக்குப் போன ஒவ்வொரு ஹிந்துவும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் மஹா உக்கிரமான காளியிடம் வரப்ரஸாதம் பெற்ற தக்ஷிணேவச்ரம் போய் தர்சனம் செய்யவேண்டும். கல்கத்தாவுக்கே ஆதாரமாயுள்ள ஹூக்ளி நதியில் ஐந்துமைல் உயரே படகிற்போனால் அழகிய கோபுரமொன்று பார்க்கலாம். எங்கு பார்த்தாலும் சணல்மில் புகையே காணும் மத்தியில் இக்கோயிலைப் பார்க்கையிலுண்டாகும் ஆநந்தத்திற்கோரளவில்லை. சிபுதலா காட்டி லிறங்கி சுமார் ஒரு மைல் நடந்தால் புண்ய பூமியாகிய தக்ஷிணேச்வரம் வந்து சேருகிறோம். விஸ்தாரமான காம்பவுண்டுள்ள இவ்விடத்தில் ஓர் அழகிய தடாகமுளது. அத் தடாகத்தினருகில் மரங்களினடியே தர்சனத்திற்காக வந்த பக்த கோடிகள் தங்குகிறார்கள். அருகில் ஒரு மண்டபமிருக்கிறது இந்த விசாலமான கோயிலில் கிழக்கே நோக்கி ராதாகிருஷ்ணரும், வடக்கு நோக்கி காளிதேவியும், எதிரில் 12ருத்ர ஸ்தூபிகளுமிருக்கின்றன. ஹூக்ளி நதிக்கரையில் கோயிலின் அமைப்பும், பிரதேசத்தின் சாந்தமும், என் உள்ளத்தைக் கவர்ந்தன.

ஸ்ரீராம கிருஷ்ணரது வட விருக்ஷம்.

சில கஜங்களுக்கப்பால் ஒரு வட விருக்ஷமிருக்கிறது. இதினடியிற்றான் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் ஏகாந்தமாக ஸமாதியிலிருந்தார். இவ்விருக்ஷத்தினருகில் ஸ்ரீராம கிருஷ்ணரது விக்ரஹமொன்று ஒரு சிறிய அறையில் வைத்து பூஜிக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது. இவ்வடவிருக்ஷத்தைப் பார்க்கும் பொழுது புத்தகயாவிலுள்ள போதிவிருக்ஷம் ஞாபகத்திற்கு வருகிறது. இரண்டு விருக்ஷங்களினடியிலும் மஹான்கள் ஏகாந்தமாய் நிர்விகல்ப ஸமாதியிலமர்ந்து அவ்விருக்ஷங்களுக்கே என்றுமழியாப் புகழையும் பெருமையையும் உண்டாக்கிவிட்டனர்.

எங்கு பார்த்தாலும் சணல்மில்களின் புகையே தோன்றுகிறதால், பணம் ஸம்பாதிப்பதற்குத் தான் கல்கத்தா ஸரி யென்று தீர்மானிக்கும் ஸமயத்தில், ஒரு நிலையில் மனதை நிறுத்தி அப்யாஸம் செய்வதற்கேற்ற இடமொன்று ஐந்து மைலுக்கப்பாலுள்ள தக்ஷிணேச்வரத்தில் இருக்கிறதென்றறிந்து களிப்புற்றேன்.

இருப்புப் பாதையும் கம்பெனி நிர்வாகமும்.

C. S. PAMPAPATI SASTRI, B.A., B. L.

பிறநாடுகளில் போன்று இருப்புப்பாதை இந்தியாவின் வியாபார முன்னேற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாக இருக்கின்றது. இதை யறிந்த யெவரும், இருப்புப்பாதையின் நிர்வாகத்தினைப்பற்றி சிறிது சிந்தனை செய்யாது போகார். தற்சமயம் இருப்புப்

பர்ந்த, யாரால் நிர்வாகிக்கப்படுகிறது, எவ்விதம் நிர்வாகிக்கப்படுகிறதென்பதைப் பற்றிய கேள்வியுண்டாகுகிறது.

இந்திய நாட்டின் சமூக முன்னேற்றத்தைப் பற்றியாவது அதனுடைய வியாபார முன்னேற்றத்தைப்பற்றிய கவலை திவலையளவுகூடயில்லாத அந்நியநாட்டின் ஒரு சில கூட்டத்தாரால் நிர்வாகிக்கப்படுகிறது. இவர்கள் இந்திய வியாபாரத்தைக் கைப்பற்றி இந்நாட்டை தம்மிடம் யேற்பட்டுள்ள அடிமைத் தனத்தினின்றும் விடுவிக்காததற்கு வேண்டிய முயற்சிகள் செய்து வருகிறார்கள். இவர்கள் கையில் நம்முடைய பொருளின் பெரும் பாகமும், வருஷந்தோறும் கொட்டப்படுகிறது. நம் உயிர், உடல், பொருள், ஆகியாவும் இவர்கள் கையில் சிக்கிய வளவில் மிக மலிவாகப் போய்விடுகிறது.

ஒருசமயம் கவர்ன்மெண்டு அசல் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒருவர் எதிர்பாராத விதமாய் ஒரு சாக்கடைக் குழியில் விழவும், கம்பெனியாரிடமிருந்து ஏராளத் தொகையை 'அஜாக்கிரதை' அபராதமாக வாங்கினார். ஒரு ஆங்கில நீதிபதியும் உத்திரவிட்டார். ஆனால் விழுந்த அவர் ஒரு இந்தியராக விருந்திருப்பாரேயாகில் தப்பாது, 2½ அணுவுக்குக் குறையாத தொகையைப் பெற்றிருப்பார்.

இத்துடனா போயிற்று? நம் புராதன வியாபாரமும் ஒழிந்தது. இந்தியர்களின் பண்டை மாண்பும் அழிந்தது. இவர்களின் முன்னேற்றத்திற்காக தம் திரேகத்திலுள்ள இரத்தத்தை வடித்தார்கள். மூன்றாவது வகுப்பில், ஆண்டவனால், பிரயாணம் செய்யத்தான் வேண்டுமென்று சபிக்கப்பட்ட நம் ஏழைச் சகோதரர்கள் படும் அவஸ்தையை என்னென்று உரைப்பது? தங்களுக்கு கொழுத்த சம்பளமாம்; தம்மை அண்டியிருப்பவர்களுக்கு, ஏழைச் சிப்பந்திகளுக்கு 20 ரூபாய் அல்லது 30 ரூபாய் சம்பளமாம். நாட் பூராவும் உழைத்தாலும் குடிக்கக் கிடைத்தது கஞ்சி தான்.

இதற்கெல்லாம் காரணம் யாது? கம்பெனி நிர்வாகம். இதில் சந்தேகமெதற்கு? எஸ். வி. கோஷ் என்பவர் தம்முடைய குறிப்பொன்றில் பின் வருமாறு எழுதுகிறார்:

"எவர்களால், இருப்பாதை ஒரு தேசத்தில் நிர்வகிக்கப்பட்டு வருகிறதோ, அவர்கள் தான் தேசத்தின் கவர்ன்மெண்டையும், தேசத்தையும் நிர்வாகிக்கிறவர்களாகக் கூறப்படுகிறது. இந்த தத்துவம்தான் ஜெர்மனியிலும் இதர தேசங்களிலும் உள்ள இருப்புப்பாதைகளை நிர்வாகிப்பவர்களை பொறுத்த தத்துவமாக விருக்கிறது. தற்காலம் அவர்களால் கையாளப்படும் முறை இந்தியாவின் முன்னேற்றத்திற்கே பெருத்த இடையூராக விருக்கிறது. இதை நாம் நடவடிக்கையில் கண்டு விட்டோம்" இதையறிந்தும் நாம் இருப்புப்பாதைகளை நம்முடைய இராஜாங்க நிர்வாகத்திற்குள் கொண்டு வராதவரை, நம்முடைய சுவதந்திரமும் வியாபாரமும் பாதுக்காக்கப்படப் போவதில்லை. கம்பெனி நிர்வாகத்தை யின்றோடு ஒழிக்கவேண்டும், தூக்கம் வேண்டாம்.

புத்தகக்கடன்.

என் நண்பர்களுக்கு,

கடனாகவோ அல்லது கைமாற்றாகவோ பிறருக்கு பணம் கொடுப்பதென்றால்! நமது மனம் கொஞ்சமேனும் திருப்தி அடைவதில்லை, வட்டிக்கு விடுவது ஒன்று தான் உற்சாகமாயிருக்கும். செல்வத்தின் சிறப்பை நாமும், நம்முடைய குழந்தைகளும் அனுபவிக்கவே பெரும்பான்மையும் நமது மனம் இடங் கொடுக்குமே அல்லாது, யாவரும் அதை நம்முடன் சேர்ந்தனுபவிக்க நாம் விரும்புவதில்லை. ஆனால் புத்தக செல்வத்தையோ வெனில், நாம் படித்து ஆநந்திக்கும் விதமே நம் தோழர்களும் கண்டு களிக்குமாறு, நமது மனம் ஆவல் கொள்கின்றது. ஓர் அரிய விஷயத்தை நாம் வாசித்தோமானால், உடனே நம்முடைய சிநேகிதர்களுக்கு அதை தெரிவித்து அவர்களையும் அதை வாங்கி வாசிக்குமாறு வற்புறுத்துகின்றோம். எவ்விதம் நாம் அனுபவித்தோமோ அதே விதம் அவர்களும் கொண்டாடா விட்டால் நமக்கு கோபமும், வருத்தமும், அவ்வரிய விஷயத்தை பகுத்தறிய நம் நேயர்களுக்கு புத்திக் குறைவோ என்ற கலக்கமும், உண்டாய் விடுகின்றது. மேலும் நாம் எண்ணிய விதமே பிறரும் நோக்கும்படி போதிக்கின்றோம். அவர்களும் நம்முடன் சேர்ந்து பேரானந்தம் கொண்டு, வரைந்திருக்கும் விஷயங்களையோ, அல்லது அதை இயற்றிய நூலாசாரியரையோ, புகழ்ந்து கூறினால் தற்சமயம் நாமே அந்நூலாசாரியராயும், அதில் அடங்கியிருக்கும் பொருளும் நாமே என்றும், மெய் மறந்து ஆநந்தக் கடலில் ஆழ்ந்து விடுகின்றோம். சிற்சில சமயங்களில் நாம் தானாகவே நம் நேயர்களுக்கு நம் புத்தகங்களை கடனாகக் கொடுத்து வாசிக்குமாறு கூறுகின்றோம். ஆதலால் புத்தகக் கடனுக்கும், பணக்கடனுக்கும் நிறம்ப பேதமுண்டு. புத்தகக்கடன் கொடாமல் இருப்பது நம்மால் முடியாத காரியம். மறுத்தலால் நம் நண்பர்களுடைய வெறுப்பிற்கே பாத்திரமாவது மல்லாமல், நமக்கும் அவ்வுதவியை அவர்கள் செய்யாவண்ணம் செய்து கொள்ளுகிறோம். ஒவ்வொரு அரிய நூல்களையும் நாமே நமக்கு சொந்தமாக விலை கொடுத்து வாங்கி வாசிப்பது என்பது அசாத்தியமான காரியம். புத்தகங்களில் அபிமானம் உள்ளவனுக்கு, தன் குழந்தைகளிடம் எவ்வளவு ஆநந்தம் உண்டாகுமோ, அவ்விதமே அவைகளிடத்திலும் டாசம் தோன்றும். ஓர் சமயம் அவைகளை கண்ணால் பார்த்தும், மறு சமயம் அவைகளை கையில் எடுத்து சில அபூர்வமான விடங்களை பன்முறை மனப்பாடமாய் வாசித்திருப்பினும், மீண்டும் ஒரு முறை அவைகளை மனனம் செய்தும், சில வேளைகளில் அவைகளை மடியில் குழந்தையைப் போல், விரித்து வைத்துக் கொண்டு அந்நூலாசிரியரின் திறமையை வியந்து கொண்டும், அவைகளைப் பற்றி சிந்திப்பதும் புத்தகப் பிரியர்களின் இயல்பு. நாம் அவைகளை எவ்விதம் கவலையுடன் போற்றுகிறோமோ அதை நேயர்கள் உணர்ந்து, அவைகளை வாசித்து பத்திரமாய் நம்மிடம் சேர்ப்பித்து விட்டால் நமக்கு மிகுந்த ஆவலாய் இருக்கும். அதற்கு மாறாக அவைகளை கவனமின்மையால் எங்காயினும் வைத்து, குழந்தைகள் கிழித்து அலங்கோலம் செய்யுமாறு விட்டு, நாமும் இவைகளை அதன் சொந்தக்காரர்களுக்கு சேர்ப்பிக்க மறந்து விடுவது மிக்க விசனிக்கத் தகுந்ததே.

என் நேயர்களே! புத்தகத்தை செல்லமெனப் பார்த்து உங்கள் நண்பர்கள் கோட்சொல்லா வண்ணம் அவர்களிடம் ஞாபகமாய் சேர்ப்பித்து விடுங்கள். உங்களுடையவைகளையும் பிறர் கொண்டு போகாவண்ணம் உங்கள் குழந்தைகள் போற் காப்பாற்றுவீர்களாக. ஏதோ நீங்கள் அறியாத விஷயத்தை நான் புகட்டுவதாக எண்ணி என் மேல் வெறுப்புக் கொள்ளாமல் உங்கள் நல்லொழுக்கங்களில் இதையும் ஒன்றாய் சேர்த்து சிறப்புற்று விளங்குமாறு செய்ய ஆவல் கொண்ட என்னை மன்னித்து விடுவீர்கள் என்று நம்புகிறேன்.

ஸ்ரீரவீந்திரநாத கவீந்திரர்.

(ஸ்ரீ பார்த்தசாரதி மிச்ரன் ஸாஹித்ய சிரோமணி.)

(முன் தொடர்ச்சி.)

கவிதையைப் பெறுவதென்றால் ரஸமாய் எழுதுவதே. ரஸம் ததும்புமாறு எழுதுபவனே கவி. வசன நடையிலும் ரஸம் பெருகும்.

உண்மையாய் நேரிடாத விஷயத்தையும் கவி எழுதுவான். நாவல்கள் பெரும்பான்மையாய்க் கற்பிதமே. கற்பிதமாயினும் அனுபவத்தை ஒட்டியிருக்க வேண்டும். நாவலின் விஷயம் நடந்ததில்லை யென்று நாமறிவோம். ஆயினும் அது நம் மனதை விட்டகலுவதில்லை. கவி யெழுதிய பொய்க் கதையையும் படிக்கையில், உண்மையாய் எதிரில் நடக்கும் விஷயங்களையும் நாம் கவனிப்பதில்லை; எதிரில் நிற்போரையும் மறந்து விடுகிறோம்; கதையின் ரஸத்தில் மூழ்கி விடுகிறோம். வயிற்றுப் பசியும் அடங்குகிறது. இலையில் அன்னமிட்டுக் கூப்பிடும் அன்னை மீதும் கோபங்கொள்கிறோம். மயிர்க் கூச்சலெடுக்கிறது. புன்சிரிப்புண்டாகிறது. சிற்சில விடங்களில் நாம் தனியாயிருந்த போதிலும் சிரிக்கிறோம்.

இவை யனைத்துக்கும் காரணம் கவியும் அவனுடைய வாக்கியங்களுமே. ஆனால் கவி நம்மெதிரில் இருப்பதில்லை; தனது எண்ணங்களைப் பதங்களால் வெளிப்படுத்தி ஒளிந்து கொள்கிறான். அவன் அமைத்த பதங்களே நமக்கு இன்பமளிக்கின்றன. கவி தன் சக்தியால் பதங்களைச் செவ்வனே சேர்த்த பிறகு பதங்களுக்கு நம்மை மயக்கும் சக்தி ஏற்படுகிறது. இத்தகைய பதங்களின் அமைப்பு பாடலாயிருந்தால் என்ன! வசனமாயிருந்தாலென்ன! பாடலைப்போல் காதுக்கு இனிப்பாய் வசனத்தையும் எழுதலாம்.

இவ்வுலகில் உயர்ந்த கவியாய் வாழ்பவர் ஸ்ரீரவீந்திர நாதரே. இவர் வங்காளத்தில் பிறந்தவர். இப்பொழுது வயது 61. இவர் அனைத்தையும் வங்க பாஷையில் தான் எழுதுகிறார். நமது கவிக்கு வங்க பாஷையில் மாத்திரம் வல்லமை யென்றல்ல. ஆங்கிலத்திலும் ஆழ்ந்த அறிவு. இவர் எழுதும் அரிய விஷயங்களை 'ஆண்ட்ரூஸ்' முதலியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொள்கிறார்கள். இந்துக்களை இகழும் இங்கிலீஷ்காரரும்கூட ஆயிரக்கணக்காய்ப் பவுன் கொடுத்து நம் கவியின் காவியங்களை வாங்கி தம் நாட்டுக்குக் கொண்டு போகின்றனர். இத்தகைய மஹா கவியைப் பெற்றெடுக்கும் பாக்கியம் பாரத நாட்டுக்கு இப்பொழுது தான் கிடைத்தது. ஆதியில் பாரத நாட்டில் பிறந்து சிறந்தோரும் மகா கவிகளே. ஆயினும் அவர்கள் தேவதைகளையும் ராக்ஷஸர்களையும் பற்றியே பெரும்பான்மையாய் எழுதினார்கள்— 'இந்திரனும் இந்திராணியும் ஜயந்தனை சீராட்டியது போலும், பார்வதியும் பரமசிவனும் ஸுப்ரம்மண்ய ஸ்வாமியை சீராட்டியது போலும், திலீபனும் ஸுதக்ஷிணையும் ரகுவை சீராட்டினார்கள்' என்று காளிதாஸ கவி எழுதினார். இந்திரன் முதலியவர்களைக் காளிதாஸ கவியும் கண்டதில்லை, நாமும் பார்த்ததில்லை. நமது கவீந்திரரும் இத்தகைய உபமானத்தைத் தேடுவதில்லை.

தங்கம், வெள்ளி முதலியவை நமது கவீந்திரரை மயக்காது. பசும்புல், மரம், செவ்வானம் இவைகளைக் கண்டே களிக்கிறார். ராஜனும் ராணியும் இவர் கதையில் வருவதில்லை. பள்ளிக்கூடப் பையன்கள், சிறு குழந்தைகள், மாடு மேய்ப்பவர், ஓடம் தள்ளுபவன், தெருவில் பழம் விற்பவன், ஊமைப்பெண், கண்ணிழந்தவள், திக்கற்று தவிக்கும் விதவைகள் இவர்களின் வாழ்க்கையே டாகூரின் கதைகளாகும். இவர் ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு நீதியை போதிக்கிறார். இவர் கதைகளைப்படித்தால் பறவை, மாம், மிருகம் முதலியவைகளிடம் அன்புஉண்டாகும். ஏழைகளிடம் ஆதரவு ஏற்படும். இவர் கதை 15 பக்கத்துக்கு மேலிருப்பதில்லை. பையன்கள் 14 வயதில் எவ்விதமிருப்பார்கள், பிறரால் எவ்விதம் மதிக்கப்படுகின்றனர் என்ற விஷயங்களை சிறிதும் அனுபவத்துக்கு விரோதமின்றி ஒரு கதையில் எழுதியிருக்கிறார். அதைப் படிக்கையில் 14 வயதில் நமக்கு நேர்ந்தவை யனைத்தும் நினைவுக்கு வரும். இவர் கதைகளைப் படிப்பவர்கள் தமக்கு நேர்ந்த விஷயம் ஒன்றையாவது ஒவ்வொரு கதையிலும் காணலாம். இவர் கதையைப் படித்தால் நாம் ஒருவரை ஒருவர் விரோதிப்பதை விலக்குவோமென்பது திண்ணம். தனக்கு ஸமமான மனிதனைக் குத்திய கொடும்பாவியைக் கண்ணெடுத்து தான் பார்த்ததில்லை என்று ஓர் கதையில் மறைவாயுரைக்கிறார். குழந்தைகள் தாயிடம் கொஞ்சிக் குலாவுவதையும், தாய் குழந்தையை சீராட்டுவதையும் பற்றி இவர் 'பால சந்திரோதயம்' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதைப் படிக்கையில் நாமும் நமது தாயிடம் அவ்விதமே கொஞ்சுவதாய் நினைப்போம். கத்தியால் குத்துவதும், நியாய ஸ்தலத்தில் வக்கீல்கள் நியாயத்தை அநியாயமாய் வாதாடுவதும் இவர் கதையில் கிடையாது. குழந்தைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டு அன்னையிடம் அழுவதும், அன்னை ஆறுதல் செய்வதுமே இவருக்கு ஆனந்தம் விளக்கும் விஷயம். இத்தகைய விஷயங்களை நம் நாட்டுப் பண்டிதர்களுக்குப் புகழத் தெரியாது. நாவலிலும் காண முடியாது. 'இந்தக் குழந்தை சமாசாரமெல்லாம் நமக்குத் தெரியாதா. இதில் என்ன ஆச்சரியம்? அவர் எழுதும் புஸ்தகத்தில் கதை ஒன்றுமே கிடையாது' என்று சொல்பவர் தான் இங்குண்டு.

கடவுள் படைத்த பொருளைக் கண்டு நாம் களித்த போதிலும் அதே பொருளைப்பற்றி கவியெழுதினால் நாம் அதிகமாய்க் களிக்கிறோம். நேரில் பார்த்தவரையே சித்திரத்தில் பார்க்கிறோம். ஆனால் சித்திரத்திலுள்ளவர்க்கு உயிரில்லை. உடம்பில் சூடில்லை; சதை கிடையாது; பேச முடியாது. ஆயினும் சற்று நாழிகை நின்று அந்த சித்திரத்தைப் பார்த்துவிட்டே போகிறோம். இதற்குக் காரணம் என்ன? கடவுள் படைப்பது போல் சித்திரக்காரனுக்கும் எழுத சக்தியுண்டு. கவியின் விஷயமும் இவ்விதமே. இது பற்றியே

காவியம், சித்திரம் முதலியவற்றை 'அபரஸ்ருஷ்டி' யென்று நம் நாட்டுப் பெரியோர் நெடுநாள் முன்னரே நிச்சயித்திருக்கின்றனர். ஆகவே கவியும் ஓர் கடவுள். கடவுளைக் காணுவிடினும் அவர் படைப்பைக் கண்டு ஒவ்வொரு நோத்திலும் அவரை நினைக்கிறோம். நாட்டின் நிலைமையை நம் நினைவில் நிறுத்த கவியைப்போல் வேறு யாராலும் முடியாது. மானிட வாழ்க்கையைக் குறித்து நம்து கவீந்திரரைப்போல் வேறு யாரும் இது வரையில் எழுதியதேயில்லை. அவர் தனியாய் ஆசிரமத்தில் வசிக்கிறார். ஆயினும் பலவித மனிதரின் வாழ்க்கையை வாசிப்போர் மனதில் பதியுமாறு எழுதுகிறார். அவருக்கு இவ்விதம் எழுத வழி காட்டியது யாதென்று கீதாஞ்ஜலி 102வது கீதத்தில் தெரிய வருகிறது.

இப்பிறப்பில் என் பாடலின் வழியாய்
உன்னை நான் தேடினேன்.
வீடுவீடாய் என்னை அழைத்துச்
சென்றதும் என் பாடலே.

என்னைச் சுற்றிலுமுள்ள உலகைப்
பாடலின் மூலமாயே நான் அறிந்தேன்.
உண்மை யனைத்தையும் இப்பாடல்தான்
எனக்கு கற்றுக் கொடுத்தது.

நுட்பமான வழி யெல்லாம் எனக்குக்
காண்பித்தது;
என் மனவானில் எண்ணிலா நக்ஷத்திரங்களை
உதிக்கச் செய்தது.

இன்பமும் துன்பமும் நிறைந்த உலகில் எனக்கு வழி காட்டியதும் இப்பாடலே. இங்ஙனம் பிரயாணம் செய்யும் என்னை எவ்வரண்மனை வாயிலில் நிறுத்துமோ!

ஆகவே இம்மண்ணுலகுக்கு அருள்புரிபவர் நமது கவீந்திரர் ஒருவரே. ஞானப்பால் கொடுப்பவர் இவரே;

காணது தன் காரியத்தால்
களிப்பிக்கும் கடவுளைப்போல்,
மறைந்து தன் மென் மொழியால்
மகிழ்ப்பிக்கும் கவியையும்—
பணிவோம்.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாணகாலத்தும் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும் ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும், சென்ற சஞ்சிகையிலுள்ள கதை)

மறுநாள் கமலா எழும்போது அவள் உடம்பிலுள்ள அலுப்பு நீங்கவில்லை; சூரிய ஒளி கூட மங்கியது போல் அவளுக்குத் தென்பட்டது; ஆறும் அயர்ந்து சோர்ந்து போவது போலிருந்தது அவளுக்கு; கரையோரமாய் இருந்த விருக்ஷங்களும் காலோய்ந்து போன வழிப்போக்கர் தயங்கிச் சாய்வது போலிருந்தன.

உமேசன் அவளுக்கு உதவியாய் வேலை செய்ய வந்ததும் அவள் சலிப்புடனே "நீ, போ, உமேசா; இன்று என்னைத் தொந்திரை செய்யாதே" என்றாள். ஆனால் உமேசன் அப்படி இலேசாய் விடுபவன் அல்ல.

"உங்களைத் தொந்திரை செய்ய வரவில்லை, அம்மா; 'மசாலா' அரைத்துக் கொடுக்கலாம் என்று வந்தேன்" என்றான்.

பிறகு வந்த இரோமேசனுக்கும் அவள் மனச் சோர்வடைந்து இருப்பது விளங்கவே, அவன் என்ன, "கமலா", என்ன உடம்பு உனக்கு" என்று கேட்டான்; ஆனால் கமலா அதற்குப் பதில் ஒன்றும் அளிக்கவில்லை. அவன் அப்படி கேட்டது அனுவசியம், யுக்தமன்று என்று கருதினதை மட்டும் காட்டுபவளாய் தலையை அசைத்துக் கொண்டே சமையலறையுள் சென்று மறைந்தாள்.

நாளுக்கு நாள் இந்த தரும சங்கடம் அதிகமாவதை யுணர்ந்த இராமேசன் இனித்தாமதியாமல் ஒருவழி தேடவேண்டும் என்று நிச்சயித்து ஹேமநளினியிடம் எப்படியாவது தன் மனதை விட்டுச் சொன்னால் அப்புறம் தான் செய்ய வேண்டுவது யாது என்று எளிதில் நிச்சயிக்கலாம் அல்லவா? என்று, வெகு நேரம் யோசித்து விட்டு ஹேமாவுக்கு காகிதம் எழுதத் தொடங்கினான்.

அவன் இப்படி காகிதம் எழுதியும் எழுதியதை அடித்து அடித்து திருத்திக் கொண்டும் இருக்கும்போது "நீர் யாரென்று அறியலாமோ, ஐயா" என்ற ஒரு புதுக்குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான். சற்று நரைத்த மீசையோடும் சற்று வழுக்கை தங்கிய தலைப்புறத்தோடும் தன்முன் ஒரு வயோதிகர் நிற்கக் கண்டான் இராமேசன்.

காகிதத்திலேயே கவனமாயிருந்த அவனுக்கு அப்போது என்ன செய்ய வேண்டும் என்பது தோன்றவில்லை.

"பிராமணர் தாமே நீர், 'நமஸ்காரம் ஐயா, உங்கள் பெயர் இராமேச பாபு அல்லவா? அதை மட்டுந்தான் தெரிந்து கொண்டேன். எங்கள் ஊரில் யாரையாவது தெரிந்து கொண்டு பேச வேண்டுமென்றால் "நீர் யாரென்று அறியலாமோ" என்று கேட்பது வழக்கம்; ஆனால் இப்பொழுது நாகரிகம் வந்து விட்டது; அப்படிக் கேட்டால் சிலர் கோபித்துக் கொள்கிறார்கள். அப்படி கோபித்துக் கொண்டால் 'நீர் யார் ஐயா' என்று பதில் கேட்கட்டுமே! அப்படி என்னைக் கேட்டால் என் பெயரை மட்டுமல்ல, என் தகப்பனார் பெயரையும்

கூட சொல்லத் தயாராக இருக்கிறேன்; என்பாட்டனர் பெயரைச் சொல்லுவதற்குக் கூட ஆக்ஷேபனை எனக்கு.

இராமேசன், புன்னகையுடன். " எனக்கு அவ்வளவு அதிகக் கோபம் வரவில்லை; உங்கள் பெயரை மட்டும் சொன்னாற் போதும் என்னை சாந்தப் படுத்துவதற்கு." என் பெயரா ? " திரைலக்கிய சக்கிரவர்த்தி" என்பார்கள் ; மேனாட்டில் எல்லாரும் " என்னை "மாமா" "மாமா" என்று கூப்பிடுவது வழக்கம் ; நீ சரித்திரம் வாசித்திருப்பாயே ! அதில் பரதனை 'சக்கிரவர்த்தி ராஜா' என்று சொல்வது போல் என்னை மேனாட்டி லெல்லாம் சக்கிரவர்த்தி மாமா சக்கிரவர்த்தி மாமா என்பார்கள்; நீ மேனாட்டில் போகப் போக என்னைப்பற்றி அதிகம் கேள்விப்படுவாய் ; அதிருக்கட்டும், நீங்கள் எவ்வூர் போகிறீர்கள் ?"

" எங்கே இறங்குவது என்று நான் இன்னும் தீர்மானிக்க வில்லை.

திரைலக்கியர்: " இறங்குவதைப்பற்றி கப்பலில் இருந்து கொண்டு சாவகாசமாய் நிதானிக்கலாம் ; ஏறுவதானால் தானே அவசரப்பட வேண்டும் !

" குவாலுண்டோவில் 'ரயிலை' விட்டு இறங்கும் போது கப்பல் புறப்படும் தருவாயில் இருந்தது ; நான் எங்கே போக வேண்டுமென்று தீர்மானிக்கும் வரை அது காத்திராது என்று உடனே அவசரமாய் கப்பலில் ஏறி விட்டேன்."

திரைலக்கியர்: " நீர் நிரம்பப் பெரியவர் ஐயா ; உம்மாதிரி மனிதரைத்தான் நான் மெச்சிக் கொண்டாடுவது ; நீரும் நானும் நேர் எதிராளிகள் ; எனக்கு மனோ நிச்சயம் என்பதே கிடையாது ; கப்பல் ஏறு முன் எங்கே போவது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது ; நாம் எங்கே போகிறோம் என்பதைப்பற்றி அறியாமலே, புறப்படுவது என்ற நிச்சயத்துடன் கிளம்புவோரைக் கண்டால் வணங்குவேன் நான் ; உம்முடைய மனைவியும் வருகிறாளோ?"

'ஆம்' என்று சொல்லுமுன் இராமேசன் சற்று தயங்கினான்.

அதைக்கண்ட சக்கிரவர்த்தி "மன்னிக்க வேண்டும் ; ஆனால் முன்னமேயே உம் மனைவியும் வருகிறாள் என்று அறிந்து கொண்டேன். அவள் சமைத்துக் கொண்டிருந்தாள். எனக்குப் பசி; சமையலறைப் புறமாய் என்னை இழுத்துச் சென்றது. அங்கே போனதும் "அம்மா, என்னைக் கண்டு வெட்கப் படாதே ! நான் " சக்கிரவர்த்தி மாமா " ஆகும் " என்று தெரிவித்துக் கொண்டேன் ; உம்முடைய மனைவி வெகு கெட்டிக்காரி, ஐயா ! காரியம் நன்றாய்ச் செய்கிறாள். நான் சொன்னேன்: "சமையற்கட்டுக்கு அதிகாரி நீ தானே அம்மா ; என்னைக் கவனிப்பார் இல்லை, நீ தான் எனக்குண்டான ஆகாரத்தைக் குறைக்காமல் கொடுக்க வேண்டும், " என்று ; அவளுடைய புன்னகையின் இனிமையினின்றே என்னிடம் பிரியமாயிருப்பாள், இனி என் கவலைக்கிடமில்லை என்று தெரிந்து கொண்டேன். நான் எப்பொழுது புறப்பட்டாலும் பஞ்சாங்கத்தில் நல்ல நாளாய்ப் பார்த்துக் கொண்டு தான் புறப்படுவேன் ; ஆனால் எப்பொழுதும் இந்தமாதிரி நல்ல காலம் வருகிறதா, என்ன? சரி, ஏதோ காரியம் இருக்கிறாப் போல் தோன்றுகிறது ; மேன் மேலும் தொந்திரை செய்யக் கூடாது, நீர் உத்திரவு கொடுத்தால் உம்முடைய மனைவிக்கு சற்று உதவி செல்யலா மென்று உத்தேசிக்கிறேன். அழகிய அடுப்படியிலே அவளுடைய அழகிய கைகள் கரியாவது சரியல்ல, அடுப்பூத நானிருக்கும் போது ; நீர் எழுந்திராதேயும், எழுதுவதை நிறுத்தி விட்டு ; நானே போய் பேசிக் கொள்ளுகிறேன் " என்று பேசிக் கொண்டே " சக்கிரவர்த்தி மாமா" சமையலறையை நோக்கிப் போய் விட்டார்.

சமையலறையில் நுழையும் போதே "நல்ல வாசனையாய் வந்தது இங்கிருந்து ; அதிலிருந்தே, தெரிந்தது எனக்கு மீன் வருவல் தயாராகிறது என்று; நான் மோர்க்குழம்பு பண்ணித்தருகிறேன், பார். எங்கள் ஊர்ப் பக்கத்தாருக்குத் தான் மோர்க்குழம்பு நன்றாய் பண்ணத் தெரியும் ; என்ன யோசனை செய்கிறாய் ; புளியில்லாமல் எப்படி மோர்க்குழம்பு பண்ணுவார் இந்தக்கிழவர் என்று யோசிக்கிறாயா, என்ன. நான் இருக்கும் போது புளிக்கென்ன குறைவு ; இதோ, பார், ஒரு நிமிஷத்தில் செய்து முடிக்கிறேன்," என்று காகிதத்தில் சுற்றிவைத்திருந்த சிறு ஜாடியைத் திறந்து கொண்டே 'மோர்க்குழம்பானதும் இன்று வேண்டியதை செலவழிதது விட்டு மிகுந்ததை நாலு நாளுக்கு வைத்துக் கொண்டு பார், கெட்டுப் போகிறதா என்று ; அப்போது தெரியும் " மோர்க்குழம்பு பண்ணத் தெரியும் என்று சக்கிரவர்த்தி மாமா சொல்வதின் தாத்பரியம் ; நீ போய் கைகால்களை அலம்பிவிட்டு வா, சாப்பிட நாழிகை யாகிறது ; பாக்கிக் காரியத்தை நான் பார்த்துக் கொள்கிறேன், பயப்படாதே ! எனக்கு இந்தக் காரியத்தில் அநுபவ முண்டு ; என் மனைவிக்கு உடம்பு பலஹீனம், அவளுடம்புக்கு சௌகரியமாய் மோர்க்குழம்பு செய்து கொடுத்துப் பழகியிருக்கிறேன். என்ன சிரிக்கிறாய் கிழவனைப் பார்த்து, நான் சொல்வது பொய்யென்று நினைக்கிறாய்?"

" எனக்கும் சொல்லிக் கொடுங்கள் மோர்க்குழம்பு செய்யும் விதம்" என்றாள் கமலா புன் சிரிப்புடன்.

"இந்தா! இப்படி யெல்லாம் இலகுவாய் அதை கற்றுக் கொள்ள முடியுமா என்ன; முதல் நாள் பழக்கத்திலேயே உனக்கு அந்த சூக்ஷமத்தைச் சொல்லிக் கொடுத்தால் வித்தியாதேவி கோபித்துக் கொள்வாள் ; முதலிலே, மூன்று நாலு நாள் இந்தக் கிழவனைத் தோத்திரம் செய்ய வேண்டும்; அப்புறந்தான் முடியும், இது ; ஆனால் இந்தக்கிழவனை எப்படித் திருப்தி செய்விப்பது என்று கவலைப்பட வேண்டும் ; நானே சொல்லி விடுகிறேன் எப்படி என்பதை, முதலாவது வழி எனக்கு வெத்திலை நிரம்பப் பிரியம், ஆனால் பாக்கை முழுது முழுதாய் போட்டுக் கொள்ள முடியாது என்னாலே. என்னை திருப்தி செய்விப்பது என்றால் அது சாதாரண வேலையா என்ன; உன்முகம் அல்லவா முக்கால் வேலையையும் உனக்குச் செய்து கொடுத்து விட்டது. அடேடே, நீ, யார், உன் பெயரென்ன?

உமேசன் பதிலொன்றும் பேசவில்லை; கமலாவை நேசிப்பதில் தனக்குப் போட்டியாய் வந்தாரே இவர் ஒருவர் என்று அந்தக்கிழவர் வந்ததில் அவனுக்கு வருத்தமும் அருவருப்பும் உண்டாயிற்று.

" நல்ல பையன் இவன் ; அடக்கமான குணம்; தன் மனதில் இருப்பதையெல்லாம் வெளியே வாய் விட்டுச் சொல்ல மாட்டேன் என்கிறான்; ஆனாலும் இவனும் நானும் சிநேகமாய் விடுவோம், சந்தேகமில்லை. சரி, நாழிகையாகிறது, இனி சமையல் வேலையில் தான் தாமதப்படக் கூடாது"

இந்தக் கிழவர் வந்தது கமலாவின் வாழ்க்கையில் இருந்த இடைவெளியை நிரப்பிற்று; அவர் வந்தது இராமேசனுக்கும் சௌகரியமாயிருந்தது. இப்பொழுது ஒருவிதமாய் இராமேசன் ஒதுங்கி நடப்பதும் முன்னாளில் கமலாவைத் தன் மனைவியென்று நினைத்திருந்தபோது முதலில் சில மாதங்கள் தன்னுடன் நெருங்கிப் பழகியதையும் ஒப்பிட்டுப் பார்த்த கமலாவின் மனம் புண்ணடைந்திருந்தது. அதை மாற்றி அவனிடமிருந்து அவளுடைய எண்ணங்களைத் திருப்பினால் அவனுடைய மனதிலுள்ள நோயும் ஆறுவதற்கு இடமுண்டு, என்று இவ்வாறு இராமேசன் யோசித்துக் கொண்டிருக்க, கமலா தன் அறை வாயிலில் வந்து நின்றாள். வேலைபற்று ஒழிந்த பகல் பொழுதெல்லாம் சக்கிரவர்த்தி மாமாவுடன் பேசிச் செலவிடுவதென்று நினைத்து நின்றாள் கமலா. அவளைக்கண்டதும் அந்தக்கிழவர்.

"இது சரியில்லை, அம்மா, இது கூடவே கூடாது" என்று ஆக்ஷேபித்தார். அவர் எதைப் பற்றிப் பேசுகிறார் என்பது கமலாவுக்கு விளங்கவில்லை. அவரை உற்றுப் பார்த்தாள் என்ன என்று கேட்பவள் போல். என்னவா? இந்த ஜோடுகளைப்பார், இராமேச பாபு, இது உம்முடைய வேலையோ? நீர் என்ன வேண்டுமானாலும் சொல்லும், இது கூடவே கூடாது; தன் காலடிக்கும் பூமிக்கும் இடையே ஒன்றைப் போட்டுக் கொள்பவன் தன்நாட்டையே இகழ்பவனாகிறான். இராமசந்திரன் சீதைக்கு "டாஸன் பூட்ஸ்" போட்டு இருந்தால் அவர்களோடு இலக்ஷ்மணன் காட்டிற்கு பதினான்கு வருஷங்கள் போக சம்மதித்திருப்பானா, என்ன? என்ன சிரிக்கிறீர் இராமேச பாபு! உமக்கு நான் சொல்வது சரியென்று தோன்றவில்லை போலும்; ஆமாம், எங்கே போகிறது என்று கூட தெரிந்து கொள்ளாமல் கப்பல் ஊதிக் கொண்டு புறப்படும் வேளையில் அதில் ஓடிவந்தேறுபவர்களுக்கு எதுவும் நேராய் இராது.

ஆரிய சரித்திரம்.

நீதிக்கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப் படங்களும் அமையப் பெற்றது. நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரத கதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சுருக்கத்தை விரிவாகவும், அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும் பள்ளியிற் பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஏனையோருக்கும் மகாபாரதத்தை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆறுமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டுபண்ணும். சகல நீதிகளும் அமையப்பெற்றது. விலை ரூபா 1.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

லக்ஷ்மிகாந்த கஸ்தூரி மாத்திரை.

இந்த சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களில் ஒன்று மிக்க அருமையான மருந்துகளால் முடிவு பெற்று வாய்வு, பித்த சிலேஷ்மத்தை அனுசரித்து வியாதிகளுக்கு தனியாக அல்லது தாம்பூலத்திலாவது உபயோகிக்க தகுந்த சஞ்சீவி.

சுமார் 200 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.
டஜன் 1-க்கு விலை ரூ. 4.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை.
50, Narayana Mudali, Street,
G. T. MADRAS.

இனும்! இனும்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

தேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோராதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. 2½ முதல்	ரூ. 3 வரை	
,, 2.	12 ,,	× 27"	,, 4	,, 6	,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,, 9	,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,, 12	,,
,, 5.	20 ,,	× 41"	,, 11	,, 13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6 வரை
9½ ,,	× 40"	,, 3 ,,	5 ,,
3 ,,	× 1½ கஜ	,, 2 ,,	3 ,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment We have just the right kind of seeds for Indian climate, both flower and vegetable

Beautifully illustrated large descriptive catalogue free on application.

(Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, Poona.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகலவிதினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.